Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.358/2021

**Depositions of PW- 4**

| Name | திருமதி.சுமதி | Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
|---|---|---|---|
| Husband name | பிரபு | Calling | |
| Village | சோலாபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of July 2026.

08.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் கடந்த 2012ம் வருடம் வாழைக்குளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக நான் பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் வனவர் ஒருவர் எனக்கு போன் மூலம் அழைத்து ஒரு விவசாயி பாம்பை அடித்துள்ளதாகவும் அதனால் தட்டைப்பாறை அருகேயுள்ள ஓடைக்கு வருமாறு கூறினார். நான் அங்கு சென்ற பின்னர் தட்டைப்பாறை அருகேயுள்ள பட்டா நிலத்திற்கு என்னை அழைத்து சென்று மேற்படி பட்டா நிலத்தில் அடித்து ஓடையில் புதைக்கப்பட்ட பாம்பை என் முன்பு தோண்டி எடுத்தார்கள். பின்பு பாம்பை அடித்த நபர் குறித்து விசாரித்தார்கள் அப்போது நானும் வனத்துறை அதிகாரிகளுடன் இருந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு சரியாக நியாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகைப்படத்திலுள்ள பாம்பு தான் என் முன்பு தோண்டி எடுக்கப்பட்டதாகும்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.